[1981 மார்ச் 25

திரு. ஜே. எஸ். இராசு : தலைவரவர்களே, 1979–80 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி புரதம சங்கத்தின் மூலம் 50 இலட்ச ரூபாயை கிளைச் சங்கங்கள் மூலம் வீடு கட்ட மனை வாங்குவதற்காக கடனாகத் தருவதற்கு என்று ஒரு திட்டம் தீட்டப்பட்டு அதற்கு ஒப்புதலும் அளிக்கப்பட்டிருக்கின்றது. அப்படி 50 இலட்சம் ரூபாய் தமிழகம் முழுவதற்கும் என்று ஒதுக்கப்பட்ட நிலையில் ஒரு குறிப்பிட்ட சங்கத்திற்கு மட்டும் 30 இலட்ச ரூபாய்க்கு மேல் ஒதுக்கப்பட்டிருக்கிறதே. நான் யாரையும் குற்றம் சாட்ட வேண்டும் என்பதற்காகச் சொல்ல வில்லை. விவரத்தைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் கேட்கிறேன். ஆகவே விற்பனை ஒப்பந்தம் செய்து கொள் வதற்கு முன்பாக இவ்வளவு பெரிய தொகையை ஒரு குறிப் பிட்ட ஒரு சங்கத்திற்கு மட்டும் அனுப்புவது நியாயமா? அல்லது அப்படி அனுப்பலாம் என்று இந்தத் திட்டம் உருவாக்கப்பட்ட நேரத்திலேயே ஏதேனும் வழி முறைகள் வகுக்கப்பட்டிருக் கின்றனவா ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, ஒரு குறிப்பிட்ட சங்கத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள தொகை அதி கம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவார்களே யானால் அதற்காக தனிக் கேள்விபோட்டால் விவரங்களை சேகரித்துத் தர முடியும். நாகர்கோவில் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் தமிழ் நாட்டிலேயே மிக நல்ல முறையில் இயங்குகின்ற ஒரு சங்கமாகும். எனவே அதையொட்டி இவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கலாம். இருந்தாலும் மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் எதற்காக இவ்வாறு கொடுக்கப்பட்டது என்று தனிக் கேள்வி கேட்டால் அதற்கான காரணங்களையும், ஏன் இவ்வளவு அதிகமாக கொடுப்பதற்கு வேண்டி வந்தது என்பதை யும் அறிந்து பதில் சொல்ல முடியும்.

அடவிநயனார் கோவில்அணை கட்டும் திட்டம்

*வினா எண் 412—திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தென்காசி தாலுக்கா மேற்கரைப் பகுதியில் அடவிநய னார் கோவில் அணைக்கட்டுத் திட்டப் பணிகள் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) அணை வேலைகள் எப்போது முடிவடையும் ?

981 மார்ச் 25]

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:** தலைவரவர்களே, இன்று அவை கூடிய நேரத்தில் நானும் உரிய நேரத்தில் வராத காரணத்தால் முதலில் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(அ) இத் திட்டம் தலைமைப் பொறியாளர(ஆய்வு)ரின் மறு ஆய்வில் உள்ளது.

(ஆ) விரிவான ஆய்வு முடிந்து தலைமைப் பொறியாளரின் அறிக்கை கிடைத்த பின் அரசு முடிவெடுக்கும்.

**திரு. மு. அப்பாதுரை :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த அணைக்கட்டினால் பயன்பெறக் கூடிய நிலங்கள் எத்தனை ஏக்கர், அதற்கான திட்ட மதிப்பீடு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டம் தென்காசிப் பகுதியில் அடவிநாயனார் கோயில் அருகில் ஹனுமாநதியின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதற்காக, ரூ. 149 இலட்சத்தில் ஒரு மதிப்பீடு 1972-ல் தயாரிக்கப்பட்டது. ஆனால் 1974—75-ல் விலைப் பட்டியல் உயர்ந்து விட்ட காரணத்தால் திட்டத்தின் மதிப்பீடு 211.50 இலட்சமாக உயர்ந்தது. அதற்குப் பிறகு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் ஏற்படக் கூடிய பயன் சரியாக இருக்குமா என்ற சந்தேகம் வந்ததற்குப் பிறகு கரிசல்குளம் அணைக்கட்டுப் பகுதிக்கு மேலே உள்ள இடத்தில் மறு ஆய்வு நடத்தி வருவதாகவும் அதன் மூலம் 3,952 ஏக்கர் நிலங்களின் பாசன வசதி உறுதி பெறுவதுடன், 1,120 ஏக்கர் நிலங்களின் பாசனப் பற்றாக் குறையைப் போக்கலாம் எனவும் தலைமைப் பொறியாளர் கூறியுள்ளார். ஆகவே இந்தத் திட்டம் இப்போது மறு ஆய்வில் இருக்கிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அமராவதி ஆற்றின் குறுக்கே அணை.

*வினா எண். 413.—**திரு. எம். சின்னசாமி :** மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் கரூர் தொகுதியில் சணப்பிரட்டி-கோயம்பள்ளி கிராமங்களுக்கிடையே அமராவதி ஆற்றில் அணைக்கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எப்போது துவங்கப்படும்?